# ஸ்ரீ வள்ளி நாயகன்

*

## நாடகக் காவியம்

T.
894.811,
17
VIN

அருட்கவி
சீ. விநாசித்தம்பிப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VERSITY OF CEYLON
18 APR 1971
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வள்ளிநாயகன்

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRI VALLI NYAKAN

உ

ஓம் சரஹணபவ

# ஸ்ரீ வள்ளிநாயகன்

## நாடகக் காவியம்

(வில்லுப் பாட்டு)

VINACITTAPI PULAVAR


ஆக்கியோன் :

**அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்**

(அளவையூர் சஞ்சீவி)



பதிப்பாசிரியர் :

**த. குணபாலசிங்கம்**

'திருவருள்', அளவெட்டி



பதிப்புரிமை] 1969 [விலை ரூ. 1-50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு — 1969

உரிமை: திரு. த. குணபாலசிங்கம்
'திருவருள்', அளவெட்டி

பிரதிகள் பதிப்பாசிரியரிடத்திலும், ஏனைய பிரபல
புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீளும் திருக்கை வடிவே லொடுதிகழ் நீபமலர்த்
தோளும் குழைகளும் சுந்தரச் சேவலும் சோதிமிகுந்
தாளும் மயூரமும் குஞ்சரி யாளுறு சண்முகமும்
நாளும் நினைக்க நலந்தரு வான்வள்ளி நாயகனே.

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமர்ப்பணம்**

தன்னைப் பற்றிய தண்தவம் யாவையும்
என்னைப் பற்றிட ஈசனை வேண்டிய
**அன்னப் பிள்ளை**யெ னும்பெயர் அன்னைக்கோர்
வன்னப் பூம்புகழ் மாலையி தாக்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன்முகம்

புண்ணியம் தானேது பாவமே தாலயம்
போய்த்தொழுத லேது வென்றே
புன்னெறி பிடித்தொழுகி நன்னெறி மறுக்கின்ற
பொல்லாத கால மிதனில்
தண்ணருள் படைத்தசிவ சமயநெறி தழுவுவோர்
தவமுன் பியற்றி னவரே,
தங்குமவர் காலத்தை வெல்லுபவ ரேயோக
சச்சிதா னந்த நிலையை
எண்ணுபவ ரே,அவர்க ளிங்கோதி நலமெய்த
ஏராள மான நூல்கள்
இருந்திட்ட போதிலு மெந்தைகந் தன்கதையை
இளைஞர்முதல் எத்தகைய ரும்
நண்ணிப் படிக்கமிகு நலமான இலகுதமிழ்
நடையிலே ஞான வடிவேல்
நற்கருணை முன்னிற்க ஆக்கினேன் கல்விவளர்
ஞானியர்க ளேற்பர் எனவே.

வணக்கம்

சீ. விநாசித்தம்பி

*அளவெட்டி,*
*சௌமிய ஆவணி 1,*
*(17-8-69.)*

UNIVERSITY OF CEYLON
18 APR 1971
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருநெல்வேலி

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

வழங்கிய

## சிறப்புரை

'ஸ்ரீ வள்ளிநாயகன்' என்னும் நாடகக் காவியம், சாதாரண மக்களும் இரசிக்கத் தக்க வகையில், தெய்வ பத்தியை வளர்ப்பதாயமைந்திருக்கின்றது. இது இதன் தனிச் சிறப்பு. நூலாசிரியரின் கவிதா சாமர்த்தியம் பிரசித்தமானது; பாராட்டற் பாலது.

சி. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சரவணபவ

# ஸ்ரீ வள்ளி நாயகன்

## கடவுள் வாழ்த்து

இராகம் : அம்சத்தொனி

கணபதே நமோ கணபதே நமோ
கஜமுகா னந்த கடவுளே நமோ
குணமெண் ணாகிய பரமனே நமோ
குன்ற மேவிய குமரியே நமோ
கணமும் அருள்செயும் கண்ணனே நமோ
கந்தனே சிவ கடம்பனே நமோ
பணசுகந் தரும் செல்வியே நமோ
பாரதீ கலை வாணியே நமோ.

## தமிழ்த்தாய்

சந்திர சேகர சங்கர வள்ளல்
தந்திட மந்திரத் தண்முனி ராசன்
சிந்தனை யோடு செகந்தனில் மேவிய
செந்தமிழ் நாயகி திருவடி சரணம்.

## அவையடக்கம்

வள்ளி நாயகன் மாக்கதை யாமிதை
உள்ள முந்தி உணர்ச்சியி னாக்கினன்
தெள்ளு செந்தமிழ்ச் செல்வர்க ளிங்கருள்
கொள்ளு நோக்கினிற் கொண்டுவப் பார்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

நாட்டுச் சிறப்பு

அண்டர்வந்து போற்றுகிற தொண்டைநாடு—வந்து
கண்டவர்கள் காதலிக்கும் தொண்டைநாடு
வேதகீதம் மேவுகிற தொண்டைநாடு – அன்பர்
ஆதரவு பொங்குகின்ற தொண்டைநாடு
அன்பிருக்கும் அருளிருக்கும் தொண்டைநாடு – கலை
இன்பமோடு வளமிருக்கும் தொண்டைநாடு
இந்தநாட்டின் மேற்பாடி என்னுமூராம் – கண்ட
சிந்தைகொள்ளும் வள்ளிமலைப் பக்கவூராம்
வள்ளிமலைச் சாரலிலே மேவுமூராம் – அருள்
துள்ளும்வேடர் மன்னுசிற்றூர் என்னுமூராம்.

* * *

நம்பிராசன் அரசியல்

வள்ளிமலைச் சாரலிலே மாண்புடைய சிற்றூரில்
கொள்ளும் வனவேடர் கூட்டமாய் வாழ்ந்திருந்தார்
வேடுவரின் வேந்தனென வெற்றிமுடி தான்சூடிக்
கூடுபுகழ் பெற்றிடுவான் கோன்நம்பி ராசனவன்.

நம்பி வரம் வேண்டல்

வடிவேல னருளாலே வாழுகிற நம்பிமன்னன்
மைந்தர் மனைவியொடு மனமகிழ்ந்து வாழ்ந்திருந்தும்
படிமீதில் ஓங்காரப் பச்சைமயில் வாகனனைப்
பாடித் தவங்கிடப்பான் பகலிரவு வேளையெலாம்.

தேவி கொடிச்சியுடன் சித்திரவே லாயுதனைத்
திருவிழாப் பூசைகொண்டு தியானத் தவமிருந்தான்
மேவுபல ஆண்மகவை வேலவனே நீதந்தாய்
விளங்குமோர் பெண்குழந்தை விருப்பமுடன்
தாருமென்பான்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம்: பைரவி தாளம்: ஆதி

பல்லவி

நீதரவில்லை என்றால் யார் தருவார் — அருள்
நீலமயி லேறும் கோலக் குமரையனே. (நீ)

அனுபல்லவி

ஆதர வுன்னையன்றி ஆருமிங் கில்லை
ஆறு முகத்தரசே அம்பிகை பாலகனே. (நீ)

சரணம்

சரவண பவஎனச் சந்ததம் பாடுவார்
தங்குமுன் சந்நிதி வந்துவந் தாடுவார்
அருகினில் நின்றிடும் ஆனந்த வேலா
அறுபடை மேவிய அற்புத சீலா. (நீ)

* * *

ஆறுமுகன் சந்நிதியில் அருந்தவமுஞ் செய்தார்கள்
அன்னதானங்களொடு பெருந்தருமஞ்செய்தார்கள்
கூறுகிற சோதிடமுங் குறியாகக் கேட்டார்கள்
குமரன்வெறியாட்டம்கொண்டமுதுவைத்தார்கள்.

* * *

இராகம்: உசேனி தாளம்: ஆதி

எங்கள் வேலா எங்கள் வேலா
ஈராறு கையனே எங்கள் வேலா
சங்கரன் மைந்தனே எங்கள் வேலா
தமியேற் கிரங்குவாய் எங்கள் வேலா.

பெண்மகவொன் றீந்தருள் எங்கள் வேலா
பெருந்துயரம் தீர்த்தருள் எங்கள் வேலா
வண்மைமிகு கையனே எங்கள் வேலா
வண்ணமுரு கையனே எங்கள் வேலா.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விதமாக இருக்கின்ற போதினிலே
இனிஎன்ன வாகுமென இயம்புவேன் கேட்டிடுமின்
முந்தையொரு காலம் முத்திக்கு வித்துரைக்கும்
முனிவராம் கண்ணுவனார் மொழிந்தசா பத்தாலே.

திருமால் சிவமுனியாகவும்
திருமகள் மானாகவும் உருவெடுத்தல்

திருமால் சிவமுனியாய்த் தேவிமகா லட்சுமியாள்
திகழும்பெண் மானாகத் திருவுருவ மெடுத்தார்கள்
வருமா தவம்செய்து வள்ளிமலைச் சாரலிலே
மன்னும் சிவமுனிமுன் வந்தந்தப் பெண்மானும்

கண்டவர்கள் காதலிக்கும் கன்னியி னழகெறிக்கக்
கருதும் சிவமுனிவன் கண்ணெதிரே சென்றதுகாண்
கொண்டார் சிவமுனிவர் குலவிடுதெய் வக்காதல்
குறித்தங்கு பார்த்தாராம் குணமான பெண்மானை.

* * *

படவர வனைய அல்குல் பைந்தொடி நல்லார் தம்பால்
கடவுளர் புணர்ச்சி என்னக் காட்சியில் இன்பந் துய்த்து
விடலரும் ஆர்வம் நீங்கி மெய்யுணர் வெய்தப் பெற்றுத்
திடமொடு முந்து போலச் சிவமுனி இருந்து நோற்றான்.

— கந்தபுராணம்

* * *

பார்வையி னாலேமானும் பயில்கர்ப்ப மானதுவே
பகருமந்த லட்சுமிமான் பாரவயி றுற்றதுவே
சீர்வளரும் வேலவனைச் சேர்வதற்கு முன்னாளில்
தெய்வத் தவஞ்செய்த ஸ்ரீமாயன் புத்திரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் புத்திரிகளில் சுந்தரவல்லி
மான்வயிற்றில் கர்ப்பமாதல்

நல்ல அமிர்தவல்லி நவிலும்சுந் தரவல்லி
நல்வர மாய்க்கந்தன் நயந்தபடி வந்தாராம்
சொல்லமிர்த சுந்தரியாள் சுரராச னிந்திரனும்
துரையின் மகள்தெய்வ யானையென வந்துதிக்க.

மோகனசுந் தரவல்லி மொழிந்தபெண் மான்வயிற்றில்
முறையே கருவாகி முத்தா யுதித்தாளாம்
ஆகவே அம்முனிவன் அருட்பார்வை யால்வந்த
அற்புதத்தின் பொற்கருவால் அயர்வாகி மெய்ந்நடுங்கி

அந்தி பகலாக அடிவயிறு நொந்தலுத்து
அங்குமிங்கு மாயோடி அம்மான் களைத்ததுவே
சிந்தை தடுமாறித் தெய்வங் களை நினைக்கும்
தீனியொன்று முண்ணுமல் தெண்ணீர் குடிக்காமல்

வள்ளி பிறந்தல்

மேனி வியர்த்து விண்ணவரை மேற்பார்த்து
வேதனை மிகவாகி விளைவள்ளிக் குழியினிலே
வானமதி பல்கோடி வந்துதித்த வாருக
வருபெண் குழந்தையொன்றை மானீன் றகன்றதுவே.

மான்குலமாய்க் காணவில்லை மானிடப் பெண்குழந்தை
வந்த வகைகண்டு மருண்டோடி யம்மானும்
வான்வந்து வைகுந்தம் மன்னுமகா லட்சுமியாய்
மாற்ற மடைந்தங்கே மாண்பா யமர்ந்தாளாம்.

வள்ளிக் குழியினிலே வந்துதித்த பெண்குழந்தை
''வாவா முருகையா வா''என்று வாய்குழறும்
புள்ளிக் கலாபமயில் புண்ணியனே பூரணனே
பொங்கார வேலவனே சிங்காரா என்றரற்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : மாயாமாளவகௌளை தாளம் : ரூபகம்

பல்லவி

சின்னக் குழந்தை யழுவாள் — செல்வச்
சிங்கார மாகிய வேலவனே என (சின்)

அநுபல்லவி

பொன்னின் கரம்நீட்டி பூந்திரு வாய்விட்டு
வன்னமயில் வீரா மால்மருகா என (சின்)

சரணம்

வேடுவர் வாழ்கிற கானத்திலே — வள்ளி
விளைந்த குழிஎன்னும் தானத்திலே
பாடுமி சைமிகு குயில்போல — இளம்
பஞ்சநிற வண்ணக் கிளிபோல — ஒரு (சின்)

* * *

நம்பிராசன் வருகை

இராகம் : அடாணா தாளம் : ஆதி

அந்தப் பொழுதில் சொந்தத்துடனே
அம்பும் சிலையும் கையேந்தி
கந்தும் பொழியும் கானத்திடையே
கருதும் நம்பி ராசனவன்.

சிங்கம் கரடி கரிபன்றி
சிறுத்தை வேட்டை யாடலுற
தங்கும் வேடர் கிளைசூழ
சார்ந்தான் வள்ளி மலையருகே.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிராசன் வள்ளிக் குழந்தையைக்
கண்டெடுத்தல்

செல்வக் குழந்தையவள்
தேனொழுகும் வாய்திறந்து
செப்புகிற மெல்லோசை
திருநம்பி ராசனுக்கு
நல்விருந்தாய்க் கேட்டிடவே
நாடினான் அவ்விடத்தே
ஞானச் சிறுமிதன்னை
நயமாகக் கண்டெடுத்தான்.

முருகன் எனக்களித்த
முத்தென்று கூத்தாடி
முத்தமிட்டு மெத்தமெத்த
முழக்கமுடன் கூச்சலிட்டான்
பெருகுவிழி நீர்சொரியப்
பேரானந் தங்கொண்டான்
பெண்கொடிச்சி கையினிலே
பெருமாட்டி யைக்கொடுக்க,

ஆனந்த மாய்க்கொடிச்சி
அன்பாக மார்போடு
அணைத்திட்ட போதினிலே
அருவிமு லைசுரக்க
கானந்த னில்வள்ளிக்
குழியிற்கி டந்ததனாற்
காரணமாம் பெயராக
வள்ளிஎனப் பேருமிட்டு,

பாலூட்டிச் சீராட்டிப்
பதிந்த மரக்கிளையில்
பண்பான தொட்டில்கட்டிப்
பரிவாய் முரசுதட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலின் திருப்புதல்வி
வனவள்ளி நாயகியாம்
மானீன்ற செல்விதன்னை
வாழ்த்தித்தா லாட்டுகிறாள்.

இராகம்: நீலாம்புரி தாளம்: ரூபகம்

ஆராரோ ஆரிவரோ
ஆரிவரோ ஆராரோ.

சீரான சிவக்கொழுந்தோ
சிலைவேடர் தவக்கொழுந்தோ
பேரான மறைபுகழும்
பெண்ணரசோ பெருவிளக்கோ. (ஆ)

கலையெல்லாம் ஒருங்காகிக்
கவின்பெருகும் திருவடிவோ
மலையெல்லாம் மேவுகின்ற
வடிவேலன் தந்தவளோ. (ஆ)

* * *

குறவரின் மத்தியிலே கொஞ்சுங் கிளிபோலே
குந்தித் தவழ்ந்து குதலை மொழிபேசி
சிறுக நடைநடந்து சிற்றிடைச்சி வாழுகிறாள்
தேவாதி தேவர்தொழுஞ் சீமாட்டி வாழுகிறாள்.

அந்தவன வேடர்க் கரியஒரு பெண்ணாகி
அன்னைவள்ளி நாயகியார் அழகெறிக்க வாழுகிறாள்
இந்தவித மாகிவளர்ந் திளமதிய மேனியளாய்
ஈராறு வயதுடைய எழிற்கன்னி யானாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி புனங்காத்தல்

கன்னிவள்ளி நாயகியைக் கருதுங் குலமுறையாய்க்
கதிரார் தினைப்புனத்திற் காவல்செய வைத்தார்கள்
உன்னும் தவங்காக்க உத்தமியை வைத்தாரே
உலகெல்லாம் நிற்பவளை உயர்பரணில் வைத்தாரே.

கூட்டிருளைப் போக்கக் குருவிவைத்த மாமணிபோல்
குறவர் புனங்காக்கக் குமாரியை வைத்தாரே
நீட்டுந் தவம்பேணும் ஜீவான்மா வாகியவள்
சேருமலப் பறவைகளைச் சேராமல் ஓட்டுகிருள்.

* * *

இராகம்: தேஷ் தாளம்: ஏகம்

ஆலோலம் ஆலோலம் ஆலோலமே
ஆலோலம் ஆலோலம் ஆலோலமே.

பூவைகாள் புறவங்காள் ஆலோலமே
பொலிதோகை மஞ்ஞைகாள் ஆலோலமே
சேவல்காள் சொற்கிளிகாள் ஆலோலமே
சிட்டுகளே குயிலினமே ஆலோலமே. (ஆ)

* * *

வள்ளி தினைப்புனத்தில் வந்த பறவைகளை
வாரிக் கவண்வீசி வாதாடி ஓட்டுகிருள்
உள்ளங் கசிந்துருகி ஓம்முருகா என்றுசொல்லி
உத்தமியாள் தினைப்புனத்து மத்தியிலே
வாழ்கையிலே

முருகன் திருத்தணிகை வருதல்

வள்ளிக் கருள்புரிய வள்ளலெனும் வேலழகன்
வாழ்கந்த மலையைவிட்டு மன்னும் திருத்தணிகைக்
கொள்ளும் புகழ்மலையிற் கொலுவீற் றிருந்தானே
குமரன் திருமுருகப் பெருமா னிருந்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகம் : காம்போதி தாளம் : ரூபகம்

பல்லவி

சண்முகன் வந்திருந்தான் — திருத்
தணிகை மலையில் — தங்க மயிலில் (சண்)

அனுபல்லவி

பண்முறை யன்பர்கள் பாட — மனம்
பரவச மாகிநின் றூட ஆட. (சண்)

சரணம்

காண்பவர் நெஞ்சம் இளக இளக
கருதினர் நன்னெறி பழக பழக
மாண்புயர் அன்பு வழிய வழிய
மலரடி யின்பம் பொழிய பொழிய. (சண்)

* * *

பஜனை

வேறு

தணிகை என்று சொல்ல சொல்லச்
சாந்தி வரும் மெல்ல மெல்ல

சரவணனே சண்முகனே
பிரணவனே உனதுதிருத் (த)

குருபரனே முருகையனே
அரன்மகனே அருள்மிகுந்த (த)

மலையழகா மயிலழகா
கலையழகா கதிமிகுந்த (த)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைப்புனத்து — நாரதர் வருகை

திருத்தணிகை மாமலையில்
சிவமுருகன் வீற்றிருக்க
ஸ்ரீவள்ளி முற்றவத்தில்
செய்தபயன் கூடியதால்
பொருத்தமாய் நாரதரும்
புனத்தினிலே வந்தடைந்தார்
பொற்புயர்ந்து கற்புயர்ந்து
புகழுயர்ந்து நின்றாளை

* * *

முருகனிடம் நாரதர் வருகை

கண்டு வணங்கிக்
கருணையால் விடைபெற்றுக்
கவிஞர் திருத்தணிகைக்
கந்தனிடம் வந்தடைந்தார்
தொண்டர்க் கரியவனே
சுந்தரனே மெய்ஞ்ஞான
பண்டிதனே என்றுகுகன்
பாதம் பரவிநின்றார்.

* * *

இராகம் : கரகரப்பிரியா தாளம் : ஆதி

பல்லவி

முருகா திருமால் மருகா சரணம்
மூவிரு முகனே சரவண பவனே. (மு)

அநுபல்லவி

கருகா வினையைக் கரைத்திடும் வேலா
கற்பக வல்லி தந்திடும் பாலா. (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

நினைத்த போதிலே என்முன் வருவாய்
நித்திய சாந்த நிலையைத் தருவாய்!
மனத்துயர் தீர்க்கும் மருந்தே உருவாய்
மண்டல மெல்லாம் நிறைந்தாய் குருவாய். (மு)

*   *   *

அருளார் விழிநோக்கி
ஆறுமுக வேலவனார்
அம்முனிவர் வார்த்தைகளுக்
கன்பாய்ச் செவிகொடுத்தார்
பொருளாகி நான்குமறை
புகழும் பெருமானே
பூரணனே பூர்வமுனைப்
போற்றியசுந் தரவல்லி

பெற்ற வரத்தின்படி
பெரும்புனத்தைக் காக்கின்றாள்
பேராளா நின்னாமம்
பேசி யுருகுகிறாள்
உற்றநம்பி ராசனுக்கிங்(கு)
ஒருமகளாய் வந்துதித்து
உயர்பரணில் ஆலோல
ஓலமிட்டு வாடுகிறாள்.

அழகுக் கிணையில்லா
அழகியாள் வள்ளிதன்னை
அரிய மணமியற்றி
அடியேமைக் காத்திடுவீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழுமைத் தமிழழகா
திருத்தணிகை யாண்டவனே
செல்வ மணமியற்றிச்
செகமெல்லாங் காத்தருள்வீர்.

என்றங்கு நாரதனுர்
ஏத்தி யிரங்குவதை
எந்தைகந்த நாயகனுர்
ஏற்று முறுவல்செய்து
நன்றுநன்று நாரதரே
நமக்கும் நினைவதுவே
நண்ணுகிறேன் என்றப்பன்
நல்வாக் குரைத்தருளி,

முருகன் தினைப்புனம் வருதல்

நாரதனு ரேகியபின்
நம்பெருமான் மானிடனுய்
நாணம்பு வில்லேந்தி
நவிலுமர வுரியுடுத்து
வீரக் கழலணிந்து
வெம்புதினைச் செம்புனத்தே
வேடனுய் வள்ளிமுன்பு
விழியெறிந்து நின்ருரே.

* * *

இராகம்: கல்யாணி தாளம்: ரூபகம்

பல்லவி

சிலை வேடுவன் வந்தான் — அருட்
சிங்கார வேலன் வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

நிலை தாங்கிய தவம் பேணி
நின்றிடும் வள்ளிமுன் சென்றிடும் சண்முக (சி)

சரணம்

மானைத் தேடு வானைப் போலே
மதுவைத் தேடும் வண்டு போலே
மோனத் தாடும் முதல்வன் போலே
முன்னர் பழகிய நண்பனைப் போலே (சி)

* * *

வள்ளியின்முன் வேடன்

வந்த சிலைவேடன்
வள்ளிதனைக் கண்டுவந்து
மானே இளங்குயிலே
மயிலே மடப்பிடியே
பைந்தொடியே நீஎன்னைப்
பார்த்துமணம் செய்யென்றான்
பத்திநெறி கற்புநெறி
பழுத்தவள்ளி நாயகியார்,

ஆர்காணும் வேடுவரே
அடியேனைக் காதலித்தீர்
அப்பாவும் சோதரரும்
அறிந்தா லுனைத்தொலைப்பார்
சீர்காணு என்னைத்
திருமணமுஞ் செய்யவந்தீர்
திண்டாட்டம் கொள்ளாமல்
சென்றுவிடும் என்றுரைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியை முருகன் மன்ருடுதல்

இன்னவகை யாய்வள்ளி
எடுத்தியம்ப வேடுவஞர்
இன்பமொழி யொன்றுசொல்லு
இளமுறுவல் செய்துவிடு
மன்னும் விழிநோக்கி
வழியொன்று காட்டென்று
மையல் வலையினிலே
வசப்பட்டான் போல்நடித்தான்.

* * *

உலைப்படு மெழுக தென்ன
உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்ருன் போல
வருந்தியே இரங்கா நின்ருன்
கலைப்படு மதியப் புத்தேள்
கலங்கலம் புனலில் தோன்றி
அலைப்படு தன்மைத் தன்ருே
அறுமுகன் ஆடல் எல்லாம்.

— கந்தபுராணம்

* * *

அந்நேரம் நம்பியுடன்
அங்குள்ள வேடரெல்லாம்
அம்மை குறவள்ளிக்
கருந்தத்தின் கொண்டுவந்தார்
நன்னீரும் தேன்திணையும்
நறுங்காட்டுப் பகப்பாலும்
நயந்தவள் ளிக்கிழங்கும்
நாடிச் சுமந்துவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் வேங்கைமரமாதல்

கொண்டுவந்த வேளையதில்
குமரனென்ற வேடுவனார்
குளிர்வேங்கை மரமாகிக்
குமரிக்கு நிழலானார்
கண்டு திகைத்தார்கள்
கானத்து வேடரெல்லாம்
கத்திவாள் கோடரியைக்
கையிலே ஓங்கிவந்து

* * *

இராகம்: மோகனம் தாளம்: ஆதி

பல்லவி

தறிப் போமே கிளை முறிப் போமே — நாம்
தங்கும் மூலமதை யறுப் போமே. (த)

அனுபல்லவி

குறிப் பாலே கணை தொடுப் போமே — வளர்
கொடிய வேங்கையிதை முடிப் போமே. (த)

சரணம்

முன்பு நில்லாத மரம் — இதன்
முதன்மை எம்மாத் திரம் — உயர்
அன்பு போன்ற பெருநிழல் — எமக்(கு)
அடுத்திடாத பெரும் விழல் — விரைந்து (த)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயமா வேங்கைதனை
வனவேடர் சுற்றிவர
"வந்தவகை நானறியேன்
மாண்பின் திறமறியேன்
தாயாகித் தந்தையாய்த்
தாஞகி நின்ற"தெனத்
தந்தைமுகம் பார்த்துச்
சாற்றிஞள் வள்ளிமணி.

வள்ளிமொழி கேட்டு
மகிழ்நம்பி ராசனவன்
"மன்னிழலாய் நிற்குமிதை
வருந்தத் தறியாதீர்
புள்ளிமயில் வாகனனின்
பொன்னருளால் வந்த"தெனப்
பொங்கித் தறிக்கவந்த
புளினரைத் தான்தடுத்தான்.

* * *

ஆங்கது காலே தன்னில் அடிமுதல் மறைக ளாக
ஓங்கிய நடுவ ணெல்லாம் உயர்சிவ நூல தாக
பாங்கமர் கவடு முற்றும் பலகலை யாகத் தாஞேர்
வேங்கையின் உருவ மாகி வேற்படை வீரன் நின்ருன்.

— கந்தபுராணம்

* * *

"அம்மைவள்ளி நாயகியே அஞ்சாதே இம்மரத்தின்
அருந்துணையில் வாழ்க"வென அகன்ருன் திருநம்பி
செம்மைமறை அடிமரமாய்ச் சிவாகமம் நடுமரமாய்
செப்புகலை கிளைபலவாய்த் திகழ்வேங்கை வடிவைவிட்டு.

* * *

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேங்கை நீங்கி வேடுவனுகிருன்

முருகப் பெருமானுர்
முன்புவந்த வேடுவனுய்
முகுந்தன் மகள்வள்ளி
மோகமுற நின்றுராம்
அருகிலே சென்றவளை
அன்பாய்ப் பணிந்தாராம்
'' அம்மையே என்றனை நீ
அருமணஞ்செய் '' என்ருராம்.

வேங்கைமர மாகிநின்று
விளையாடல் செய்தவரை
மெய்த்தவத்து வள்ளியவள்
மெய்யுணர்வி ஞல்விளங்கி
'' தாங்க ளுயர்குலத்தீர்
தமியளோ வேடுவிச்சி
தாவிமணம் பூணுவது
தருங்குலத்துக் காகாதே.

'' ஆகையால் அன்புடையீர்
அடியேன் தனைவிலகி
அகலுவீர் இல்லையெனில்
அல்லல்செயும் வேடுவரோ
சோகமுற வைத்தும்மைத்
துயர்பலவுஞ் செய்திடுவார்
சுந்தரரே போமின் ''எனச்
சொல்லமிர்த மாயுரைத்தாள்.

பெண்ணின் மனத்தடக்கம்
பெருமான் அறிந்துகொண்டார்
பிரியமென்மேல் வைத்தன்பாய்ப்
பேசுகிருள் இக்கன்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிவந்த என்கருமம்
இனிதாக முடியுமென
இன்னுமவ ளைத்தொடர
இனவேடர் ஓடிவந்தார்.

* * *

வேடர் வருகை

பாட்டு

தென்ன தெந்தன தென்ன தெந்தன
தென்ன தெந்தன தென்னனே
தென்ன தெந்தன தென்ன தெந்தன
தென்ன தெந்தன தென்னனே.

வன்ன மானும் மரையும் புலியும்
உன்னி உன்னிப் பாயுது
வாய்ந்த எருமைக் கூட்டம் நின்று
கன்றி னோடு மேயுது
சிங்கம் பன்றி சிறுத்தை கரடி
பார்த்துப் பார்த்து ஓடுது
சிறுகு ரங்கு தாளம் போட
நரியி னங்கள் பாடுது. (தெ)

* * *

முருகன் கிழவனாகிறான்

பாட்டோடு வந்தடைந்த
பலவேடர் கூட்டமதைப்
பார்த்தசிலை வேடுவனார்
பழுத்தநரைத் தாடியுடன்
ஆட்டும் நடைநடந்தே
அக்கைமணி வெண்ணீற்றின்
அழகு விளங்குகிழ
வடியவராய் நின்றாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் — நம்பிக்குத்
திருநீறு கொடுத்தல்

பரிவாரம் தம்முடனே
பரிவாக வந்தநம்பி
பக்திபெற, வேலழகன்
பரவுதிரு நீறளித்தான்
உருமாறி யங்குநின்ற
ஓங்கார மாங்கிழவர்
ஓராறும் அட்சரத்தை
உச்சரித்து நீறளித்தார்.

''நம்பி யுனக்குவெற்றி
நலமேயுண் டாகு''கென
நம்விருத்த வேடுவனார்
நாவினால் வாழ்த்துரைத்தார்
கும்பிட்டு நம்பிமன்னன்
குனிகிழவ ரைப்பார்த்து
''கோவேநீர் எங்குவந்தீர்
குறிப்பிடுமின்'' என்றுரைக்க,

'' அப்பனே நம்பி–நான்
அருட்குமரி தீர்த்தத்தே
ஆடவந்தேன்'' என்றடியார்
அருங்கருத்தி னுரைத்தார்
''ஒப்பவே நம்வள்ளிக்
குறுதுணையா யிங்கிரு''மென்
றுரைத்துநம்பி போயகல
உத்தமனார் அங்கிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவரும் வள்ளியும்

மானீன்ற வள்ளியம்மா
மதியூன்று பாங்கியரை
வரிசையாய்த் தானமர்த்தி
வடிவேல் முருகனது
தேனூர் புகழ்பாடித்
திருப்பஜனே செய்தாளாம்
சென்னி தனையசைத்துத்
திகழ்கிழவர் கேட்டாராம்.

* * *

பஜனை

அரகர சிவானந்த
சரவண முருகா
குருபரா னந்தனே
குமரனே முருகா. (அ)

உன்னுடைய வடிவமே
உலகினது வடிவம்
ஓங்கார ஞானவேல்
ஓங்குகலை வடிவம். (அ)

மன்னுமர கதமயில்
வருவிந்து வடிவம்
வாரணத் துவஜமே
மணிநாத வடிவம். (அ)

உள்ளடியில் மலைகளும்
ஒளிரடியின் முற்புறம்
வெள்ளக் கடல்பலவும்
விரவிலே உருமிடியும் (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனோடு கோள்களும்
மிளிர்பரடு களில்வருணன்
தானக்கு பேரனும்
சார்நிருதி தம்மோடு (அ)

முனைஇராட் சதர்களும்
முன்கணைக் காலிலே
முனிவரும் மணிகளும்
முழந்தாளி லேசர்வ (அ)

வித்தியா தரர்களும்
விளங்குந் தொடைகளில்
பத்திமை பொங்கியே
பரவிநின் றணிசெயும் (அ)

இந்திரன் சயந்தனும்
எழில்தொடை மூலத்தில்
அந்தகனும் காலனும்
அரைமுற் புறத்திலே (அ)

அசுரர், விலாவிலே
அமரரும் பேரின்ப
வசியமூ லாதாரம்
மன்னுநா கர்களும் (அ)

உயர்கோசத் தமிர்தமும்
உந்தியில் உயிர்களும்
வயமார்பில் கலைகளும்
மாணூலில் ஞானமும் (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிர் நுனியில் அண்டமும்
வரமுதவும் அங்கையில்
நயபோகப் பொருள்களும்
நற்றேளில் அரிஅயனும் (அ)

கைவிரலில் சுரமகளிர்
கண்டத்தில் நாதமும்
செய்யசுடர் அக்கினியும்
திருவாயில் வேதமும் (அ)

பல்லிலே அட்சரமும்
பயில்நாவில் ஆகமும்
சொல்லிதழில் எழுகோடி
சுவையான மந்திரமும் (அ)

நாசியில் வாயுவும்
நயனத்தி லிரவிமதி
ஓசைபெறு செவியிலே
ஒருநூறு ருத்திரரும் (அ)

திருநுதலிற் குடிலையும்
சென்னியிற் சிவனுரும்
அருளன்பு தோன்றவே
அழகா விளங்குவாய். (அ)

* * *

கீதத்தைக் கேட்டிருந்த கிழவர் மிகநயந்து
''கிஞ்சுகமே நன்றுநன்றென் மிஞ்சுபசி தீர்ப்பாயே
சாதமிட்டுத் தீராத தனிப்பசியைத் தீர்ப்பாயே
தாமதமுஞ் செய்யாதே தையலே'' என்றுரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி அமுது கொடுத்தல்

'' மாதவத்தோர் போற்றும்
மறைக்கிழவ ரேஇந்த
வனவேடர் உண்பதையே
வழங்குவே '' னென்றுரைத்துப்
பாதத்தைப் பூசைசெய்து
பண்பான வள்ளியம்மை
பயில்தேன் தினைமாவும்
பழங்கிழங்கும் தான்கொடுக்க,

வாங்கியுண்டார் அப்பெருமான்
வள்ளியது கையாலே
'' மாவும் பசுந்தேனும்
மகிழ்ந்துண்டேன் பெண்மயிலே
தாங்கரிய தண்ணீரின்
தாகத்தால் வாடுகிறேன்
தாகத்தைத் தீர்த்துவிடு
தையலே காப்பாற்று. ''

* * *

சந்தம்

சிந்தை மகிழ்ந்து நயந்தரு செந்தினை
தின்று சுகம்பெறு சிவவேடர்
தந்த நலந்திக ழுந்தினை தொண்டையில்
வந்து விழுங்கிட முடியாதே
நொந்தது மந்திர சுந்தரி யேபுனல்
தந்து சுரந்திடு வழிகாட்டென்
றந்த வனந்தனி லிந்திர னந்தரர்
புந்தி மலங்கிட மொழிவானே.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டைவிக்கிக் கொண்டதெனச்
சுழலவி ழியெறிந்தார்
சுந்தரியும் மெய்ந்நடுங்கித்
தூயவரை நன்கணைத்தாள்,
'' அண்டையிலே ஏழுமலைக்
கப்பாற்சு ணையுமுண்டு
அங்குசென்றால் தாகமெலாம்
அடங்கு ''மென வேமொழிந்தாள்.

வள்ளி — திருச்சுனை காட்டல்

'' செல்லும் வழியறியேன்
திருச்சுனையின் திசையறியேன்
தேசத்துக் கோபுதியேன்
செல்வியே, நீவந்து
நல்லவழி காட் ''டென்றார்
ஞானப் பெருங்கிழவர்
நம்வள்ளி நாயகியும்
நடந்துவழி காட்டுகிறாள்.

* * *

ஆனந்தக்களிப்பு — (நடை)

சங்கர சங்கர சம்போ — சிவ
சங்கர சங்கர சங்கர சம்போ.

ஏறாத மேடெலாம் ஏறி — அவர்
இருவோரு மாயந்த ஏழுமலை ஏறி
ஊறாத அமிழ்தூறும் சுனையில் — மலை
உச்சியின் மேவிய ஓங்காரச் சுனையில் (சங்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றுமா ருதாரத் தப்பால் — நின்ற
சகஸ்ரார மென்கின்ற ஏழா மிடத்தில்
ஊற்றுஞா னங்கூடு மாபோல் — அப்பன்
உயரருவி நீர்தன்னை உவப்பாக உண்டார்.
(சங்)

"தாகத்தைத் தீர்த்தவளே மோகத்தைத் தீர்"

" தாகமும் தீர்த்தனை பெண்ணே — என்றன்
மோகமுந் தீரவழி செய்குவாய் பெண்ணே
ஏகமாய் நின்றகுரு நாதன் " — புனத்
திவ்வாறு கேட்கவே ஏங்கினுள் வள்ளி. (சங்)

சினவாத வள்ளியும் சினந்தாள் — இந்தச்
சிவவேட தாரிக்கிவ் வெண்ணமுந் தகுமோ
மனமாறும் பித்தரைப் போலே — இங்கு
வந்துவசை பாடுகிற மாதவத் தோரே. (சங்)

* * *

நத்துப் புரைமுடியீர் நல்லுணர்வு சற்றுமிலீர்
எத்துக்கு மூத்தீர் இழிகுலத்தேன் தன்னைவெஃகிப்
பித்துக்கொண் டார்போல் பிதற்றுகிறீர் இவ்வேடர்
கொத்துக்கெல் லாமோர் கொடும்பழியைச் செய்தீரே.

— கந்தபுராணம்

* * *

" நரைதிரை வந்துற்ற போதும் — அறிவு
நரையாமல் உரையாடும் பெரியவரே போம்போம் "
விரைவான கடுவார்த்தை பேசி — வள்ளி
விளைவான புனமீது வேகமாய்ப் போனுள். (சங்)

" நில்லுநில் நில் " என்று கிழவர் — " உனது
நிலைமையறி யாதிந்த நெறிமொழி புகன்றேன்
சொல்லுக்குக் கோபிக்க லாமா — உனது
துணையன்றி நானிங்கே அடிவைக்க லாமா. (சங்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கைப்பிடித் தென்னைவழி காட்டு'' — என்று
கந்தனும் சல்லாபக் கதைசொல்லிச் சொல்லி
ஒப்பமிகு மோங்கார வடிவா — என்று
உற்றதுணை யானதன தண்ணனை நினைத்தார். (சங்)

* * *

இராகம் : பூபாளம் தாளம் : ஆதி

பல்லவி

வரவேண்டும் வரவேண்டும் கணநாதனே — நீ
வரமெல்லாந் தரவேண்டும் கணநாதனே.

அநுபல்லவி

பிரணவ நாயக செல்வவி நாயகப்
பெருமா னேகஜ முகராஜா — அருள் (வர)

சரணம்

நானென தென்கிற தன்மை யடங்க
நண்ணிய ஐம்புல வேட்கை யொடுங்க
ஞானம னுலய மேவி யிருந்து
நற்பதந் தருவாய் கருணை புரிந்து. (வர)

* * *

கணபதி வருதல் (சங்கர சங்கர சம்போ........)

என்றங்கு கணபதியைக் கூவ — அந்த
இபராஜ மாமுகனும் கனிவாக வந்தார்
நின்றங்கு பிளிறுமொழி கேட்டாள் — வள்ளி
நெஞ்சுருகி யஞ்சினுள் ஆனையைக் கண்டு. (சங்)

தஞ்சம்நீ என்றயலில் நின்ற — அந்தத்
தவவேட சுந்தரனைத் தாவிப் பிடித்தாள்
வெஞ்சினங் கொண்டுபழி சொன்ன — அந்த
வேடிக்கைக் கிழவனைச் சரணம் புகுந்தாள். (சங்)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு நடை

தந்தன தனுதன்ன தந்தனத ஞனு
தந்தன தனுதன்ன தந்தனத ஞனு

விக்கின விநாயகனை மெய்த்தநினை யாமல்
விட்டதால் இந்தவித விசனங்கள் என்று
தக்கசமை யத்திலே நமயனுர் வந்த
தருணத்தைப் பயனுக்கித் தையலது செவியில்

வள்ளிக்கு உபதேசம்

அப்பனுக் குபதேசம் அன்றுதவி யதுபோல்
அக்கன்னிக் குபதேசம் ஆற்றினுர் கிழவர்
செப்பரிய உபதேசம் செவியுற்ற போதே
செந்தினைக் குறவள்ளி தெய்வீக முற்ருள்.

* * *

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
குன்னம் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதன்னை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாணம் முயன்றவனே.

—கந்தர் அலங்காரம் - அருணகிரிநாதர்

* * *

தெய்வீக வள்ளியின் திருவிழிகள் காணச்
சிவவேடர் தம்முடைய திருவடிவு கொண்டார்
கைவேலி னழகுடன் கைக்குலிச முதலாம்
கதிரோங்கு மாயுதம் கருதிப் பிடித்தார்.

* * *

முருகன் காட்சி

ஓராறு வதனமும் ஈராறு கரமும்
ஓங்கார மயிலுடன் உற்றகழ லடியும்
சீராய் விளங்கவே சிவகுமரன் நின்ருன்
சீமாட்டி வள்ளியும் தெளிவாகக் கண்டாள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம்

பொருந்து கரங்கள் ஈராறும்
பொலிந்த முகங்கள் ஓராறும்
இருந்த சுகந்த வடிவேலும்
இசைந்து தெரிந்த புரிநூலும்
மருந்து சுரந்த இருதாளும்
மகிழ்ந்து விளங்கு மயிலேறும்
திருந்தி யசைந்த கொடியாவும்
சிறந்து நிறைந்த பெருமாளே.

* * *

ஆனந்தங் கொண்டாள் அடிமேல் விழுந்தாள்
அறிவீன மாயிந்த அடிமையேன் செய்த
ஈனம் புரிந்திடும் என்பிழை பொறுப்பீர்
என்றழுது தொழுதாள் எழில்வள்ளி யம்மை.

இவ்வண்ணம் கண்ட எந்தைவேல் முருகன்
எம்மைநீ சேர இயற்றிய தவத்தின்
கைவண்ணத் தாலே கன்னியே உன்றன்
கருத்திலே என்னைக் கண்டேன் மகிழ்ந்தேன்.

சீவனைத் தேடிச் சிவம்வந் தணைக்கும்
செய்கை யிதுஎன்று தேவியைத் தேற்றிக்
காவல்நீ செய்யும் காட்டுப் புலத்தே
கன்னியே செல்வாய் கருதியான் வருவேன்.

முருகன் விட்டகல, வள்ளி தினைப்புனம் போகிறாள்

எனவே மொழிந்தங்(கு) எந்தைகந் தப்பன்
இம்மென வகன்றார், இறைவிகுற வள்ளி
புனிதநிலை யெய்திப் புந்திதடு மாறிப்
புனவனம் செல்லப் பொற்புடைய பாங்கி.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு நடை

அம்மாநீ எங்குற்றாய்
ஆரணியம் தனில்நடந்து
எம்மாலே ஆனமட்டும்
எங்கணுமே தேடிவந்தேன். (அம்)

பாய்புலிவாய்ப் பட்டனையோ
படுபேயைக் கிட்டினையோ
நோய்கொண்டு வழிமாறி
நொந்துமிக அலைந்தனையோ. (அம்)

வாய்கொண்டு பறவைகளைச்
''சோ'' என்று துரத்தாமல்
மாயமென மறைந்தாயே
மணமகள்போல் நின்றாயே. (அம்)

கண்சிவந்து வாய்வெளுத்து
கனிவான வியர்வையுடன்
ஒண்ணகிலம் விம்மலுற
உடைநெகிழக் காரணம்சொல். (அம்)

* * *

பாங்கிக்கு வள்ளி கூறுவது

பாங்கியார் இந்தவிதம்
பதைபதைத்துக் கேட்டிடவே
பத்திமிகு வள்ளியம்மை
பரிவாகச் சொல்லலுற்றாள்
ஓங்கும் மலைச்சுனையில்
உற்றநீர் ஆடிவந்தேன்
உள்ளங் கலங்காதே
உயிரான என்தோழீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுவள்ளி நாணமுடன்
எடுத்தியம்பும் வேளையிலே
ஏறுமயில் வாகனனார்
எய்யம்பு வில்லுடன்முன்
நின்றனரே வேட்கையொடு
நெடுங்களைப்புக் கொண்டவர்போல்
''நீர்வந்த தே''னென்றே
நீலவள்ளி சாலமிட்டாள்.

முருகன் வினவுதல்

''பெண்களே என்கணையாற்
புண்பட்ட பெண்யானை
பேதலிப்பாய் இப்புனத்தே
வந்ததோ'' என்றியம்பிக்
கண்கொண்டு வேடுவனார்
கன்னியுடன் பேசலுற்றார்
கருத்தை யறிந்துகொண்டாள்
கலைபூத்த பாங்கியவள்.

* * *

முருகன் பாங்கியைக் கேட்கிறார்

இருவரையும் பேசவிட்டே ஏகினாள் வேறிடத்தே
ஏகுவதைக் கண்டுகொண்ட என்னப்பன் கந்தப்பன்
மருளில்லாப் பாங்கிதனை மன்றாடி நின்றாராம்
மாதேகேள் நின்தலைவி வள்ளிஎனும் பெண்ணரசை

* * *

இராகம்: சாரமதி தாளம்: ஆதி

பல்லவி

சார மதி சொல்லடி — தோழி
தந்திர மந்திர சுந்தர வள்ளியை (சா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபல்லவி

காரண மாகிக் காட்டிற் பிறந்தவளை
நாரண ஞர்தந்த ஞானச் சிறுமிதன்னை (சா)

சரணம்

கற்பு விளைந்தமுத்து மணியாவாள் — அன்புக்
கனியில் வடித்தெடுத்த ரசமாவாள் — நல்ல
அற்புத மாகிய தவமுடையாள் — என்னை
அடைந்திடும் பேரனு பவமுடையாள் — தன்னை.
(சா)

* * *

நான்வதுவை செய்வதற்கு
நயந்தவழி செய்யென்ருர்
'' நல்லவரே வேடுவரோ
பொல்லா தவர்காணும்
ஊன்வதைக்கும் கொள்கையுள்ளார்
உம்மையுமே கொன்றிடுவார்
ஓடி மறைந்திடுவீர் ''
என்றந்தப் பாங்கிசொல்ல

மடலேறுவேன் என்கிருர்

வள்ளிதனை நான்மணக்க
வழியில்லா விட்டாலோ
மடலேறு வேனென்று
வடிவேலன் கட்டுரைத்தான்
உள்ளமதில் இவ்வார்த்தை
உற்றுணர்ந்த பாங்கிதன்னை
உருக்கவே அன்னவளும்
உத்தமரைப் பார்த்துரைப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயா கலங்காதீர்
அறுக்குமடல் ஏருதீர்
அம்மைதனை நான்கொணர்வேன்
அம்மட்டும் அங்குள்ள
மையாரும் நன்னீழல்
மாதவிப் பொதும்பரிலே
மறைந்திருப்பீர்" என்றுரைக்க,
மறைந்திருப்பார் நம்பெருமான்.

பெற்றதாய் தன்முன்பு
பிள்ளைவந்து சேர்வதுபோல்
பெருங்காந்தக் கட்டியிலே
சிறுகாந்தம் சேர்வதுபோல்
பற்றுநறு மாமலரைப்
பண்வண்டு சேர்வதுபோல்
பதியை அடைவதற்குப்
பல்லாண்டு காத்திருந்த

பாங்கி வள்ளியைக் கொணர்தல்

வள்ளியைக் கொண்டுவந்து
வண்பாங்கி ஒப்படைக்க
வள்ளலுமே பேரின்ப
வாழ்க்கை நலமியற்றி
கள்ளமிலாக் கற்பரசே
காதலியே நாளைவந்து
காண்கின்றேன் என்றுரைத்துக்
காளையவர் சென்றாரே.

ஈங்கிப் படியாக இருந்துவரும் நாட்களிலே
இருந்த தினைப்புனமும் இசைவாய்க் கதிர்பழுத்து
வீங்கி விளைவாக வேடுவரும் அங்குவந்தார்
விளைவரிவி வெட்டுகிற வேளைவந்த தாகையினால்.

வள்ளி மனம் வருந்தல்

''செல்வவள்ளி நாயகியே
தினைப்புனத்தை விட்டகன்று
சிற்றூர்க்குப் போ'' என்று
சிலைவேடர் கட்டுரைக்க
நல்விளக்காய் நின்றவளும்
நாதன் நினைவுகொண்டு
நான்சென்றால் என்நாதன்
நமதூர்க்கு வருவாரோ.

* * *

இராகம் ; சாருகேசி தாளம் : ஆதி

பல்லவி

உருகுதையா மனம் உருகுதையா—இங்கு
உன்னை நினைக்கக் கண்ணீர் பெருகுதையா—முருகா

அனுபல்லவி

கருணைக் கடலே கற்பகமே என்னைக்
கைதந் தாளுதல் உன்கடனே அப்பா. (உ)

சரணம்

நானுன்னை மறக்கினும் நீமற வாது
நாடிவந் தருள்வாய் துயர்வரும் போது
நானிலத்தில் துணை வேறினி யேது
நம்பிநின் றேனுனை நாளும்தப் பாது. (உ)

* * *

முருகா......உனக்கு

பாதை தெரியுமோ
பதைபதைத்துத் திரிவாரோ
பாங்கியும் என்னுடனே
பயின்றங்கு வந்துவிட்டால்
காதலனுக் கென்செய்தி
கழறுவார் யாருமில்லை
கானத்து மானினங்காள்
கலாப மயிலினங்காள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிகாள் புறவங்காள்
கீதக் குயிலினங்காள்
கிளைவண்டுக் கூட்டங்காள்
கேட்பீர் எனதுமொழி
வழியறியா தென்றனது
மணவாள னிங்குவந்தால்
வாழுமெங்கள் சிற்றூர்க்கு
வருங்குறிப்பைச் சொல்லுமென்றாள்.

தன்னைமறந் தவ்விடத்தே
தலைவன் நினைவாலே
தடுமாற்றம் தானடைந்து
தயங்கி உடல்நடுங்கி
என்னை விரும்பிவந்த
என்னுயிராம் நாயகனை
என்றைக்குக் காண்பேனோ
என்றுபெரு மூச்சுவிட்டு.

* * *

இராகம்; சகானா தாளம்: ஆதி

('ஐயா பழனிமலை வேலா' என்ற மெட்டு)

மத்துக் கடையும்கரம் போலே—வள்ளி
மயங்கிக் கலங்கிக் கரைவாளாம்
பித்துப் பிடித்தபிணை போலே—வள்ளி
பெரும்பு னத்தே அலைவாளாம்.

கண்கள் கலங்கிநீர் ததும்ப—அந்தக்
கரண மொடுங்கியுள்ளம் வெதும்ப
பண்கள் பயிலும்வாய் புலம்ப—கலை
பயில்கிற கூந்தலு மலம்ப (ம)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளி சிற்றூர் சேர்ந்தாள்

துன்பமுடன் வீடுசென்று
சோர்ந்து விழுந்தாளாம்
துணைவன் நினைவாலே
துயர மடைந்தாளாம்
இன்பச் சிறுகன்னிக்
கேதோ பிடித்ததென
எங்குமுள்ள வேடுவரும்
இனத்தோடு வந்தடைந்தார்.

வள்ளியின் நிலை

குணம்மாறி நிலைமாறிக்
குமாரி யிருக்கக்கண்டு
குலதெய்வ முருகனையே
குறித்துவெறி யாட்டயர்ந்தார்
கணமேனும் கண்ணுறக்கம்
கற்பரசி கொள்ளவில்லை
கானவள்ளி நாயகியார்
கந்தன் நினைவாலே.

* * *

**விண்** ணுறங்கும் மண்ணுறங்கும் மற்றுளவெ லாமுறங்கும்
கண்ணுறங்கேன் என்தலைவர் காதலாற் பைங்கிளியே.

— தாயுமானவர்

தண்ணென் கதிர்மதியும் தபனனும் ஞாலமிதில்
நண்ண மறந்தாலும் நான்மறவேன் நாயகனை.

* * *

இராகம் : ஆகிரி தாளம் : ஆதி

நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன், மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
    வீரங்கொள் சூரர்க்கும் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளானே
    நானென்று மார்தட்டும் பெருமாளே.

— திருப்புகழ்

* * *

என்றிவ் விதமாக
    எல்லாரும் கண்ணுறங்க
இமையா திருக்கின்றார்
    எங்கள் பெருமாட்டி
ஒன்று பலவாக
    உருவெடுக்கும் நம்பெருமான்
ஊரான சிற்றூரில்
    உற்றவள்ளி வாழுகிற

அக்குடிசைப் பக்கலிலே
    அடரிருளில் வந்துநின்றார்
ஆறுமுகன் நிற்பதனை
    அறிந்தாள் பெரும்பாங்கி
''பக்குவமொன் றுணராத
    படர்வேடர் மத்தியிலே
பண்புடையீர் இங்குவந்து
    பார்த்திருக்கக் கூடாதே.

'' ஞானமே யில்லாமல்
    நாண்பூட்டும் வேடுவர்கள்
நாடியுமைக் கண்டுவிட்டால்
    நமனுலகம் சேர்த்திடுவார்
வானமுத லெம்பூத
    வடிவான மாப்பிளையே
வருவேன் இமைப்போதில்
    வாய்வயிறு பாராமல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சித்தங் கலங்கித்
திகைத்திருக்கும் சுந்தரியைச்
சேர்த்திங்கு நான்வைப்பேன்
சேமமாய் வாழ்ந்திடுமின்"
இத்திற மாய்க்கூறி,
இசைந்த துணைப்பாங்கி
இருண்ட நடுநிசியில்
எடுத்தவடி கேட்காமல்,

வள்ளியைக் கொணர்தல்

சாந்த நடைநடந்து
தாய்தந்தை தமரயலார்
தழுவுநாய் கண்ணுறங்கத்
தருணமதைப் பார்த்திருந்து
வாய்ந்தகத வைத்திறந்து
வழிபார்த்த வள்ளிதன்னை
வாவென் றசைத்தெழுப்பி
வள்ளலிடம் ஒப்படைத்தாள்.

ஆதியந்த மில்லாதான்
அரிவைதனைக் கைப்பிடித்தான்
அப்போது வள்ளியம்மா
ஆறுமுகன் தாள்பணிந்து
"வேதமே காணாத
மெய்யடிகள் நொந்தனவோ
வேலா எனைத்தேடி
வெகுவாய் நடந்தனையோ.

"தீமையேற் காயிரங்கும்
சிவகுருவே" என்றென்று
தேங்கி யழுதரற்ற
செல்வனுமே கையணைத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமிகு பாங்கிக்குச்
சித்தமிக நன்றிசொல்லிச்
சீர்வழங்கும் தம்பதிகள்
திருப்பூங்கா வொன்றடைந்தார்.

* * *

நொண்டிச் சிந்து

வேலவனின் கதை கேட்டால்—அன்பு
மேலோங்கித் தேனின்பம் பெருகுமையா.

வேடர் வள்ளியைத் தேடுதல்

கங்குலும் கழிந்த தையா—கொடிச்சி
கண்விழித்துப் பார்க்கையிலே வள்ளியைக்காணு
திங்குமங்கும் தேடிப்பார்த் தாள்—காட்டில்
எவ்விடத்தும் காணுமல் ஓடிப்பார்த்தாள்.

செய்தி யறிந்தான் நம்பி—இனிநான்
செய்வதென்ன வோஎன அழுதுவெம்பி
மெய்நடுங்கக் கோபம் கொண்டு—தனது
வேடுவரின் கூட்டமொடு தேடிஎழுந்தான்.

ஈட்டிவாள் பிண்டி பாலம்—அம்பு
இலங்கிய வில்லிசை முழங்கிடவே
வேட்டைநாய் வழி காட்ட—அந்த
வேடுவர்கள் கூடிவரக் கண்டனள்வள்ளி.

வேடர் வருவதைக்
கண்ட வள்ளி பயப்படுதல்

நெஞ்சுமிகக் கலங்கி நின்ருள்—வேடர்
நிட்டூரஞ் செய்திடுவர் என்றுபயந்தாள்
''கொஞ்சமுங் கலங் காதே—சூரர்
குலமறுத்த வேலுண்டு'' என்றனன்கந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியைத் தனக்குப் பின்னே—மறைத்து
வைத்திருக்கும் வேலவர்முன் வேடுவர்வந்து
அள்ளியள்ளிப் பாணம் விட்டார்—அவைகள்
ஆறுமுகன் மீதுமலர் மாரிஎனவே.

விழுவதைக் கண் டார்கள்—மேலும்
மெய்யறிவில் லாதவர்கள் ஐயனிடத்தே
குழுமிவந் தே யடுக்க—வேலனின்
கோழிக்கொடி ''கொக்கரக்கோ'' எனஒலிக்க,

வேடுவர் மடிதல்

வேடுவரும் மாய்ந் தொழிந்தார்—அந்த
வேளையிலே வள்ளிமன வேதனைப்பட்டாள்
ஆடும் மயில்வா கனரும்—அப்போ(து)
அன்னைவள்ளி நாயகியின் அன்பையறிய.

நாரதர் வருகை

அவ்விடத்தை விட்டகல வே—எங்கள்
அன்பழக சுந்தரியும் முன்புநடந்தாள்
இவ்விடத்தில் நாரத ரும்—வந்து
ஈராறு கையானை ஏத்திமொழிவார்.

* * *

நாரதர் தோத்திரம்

திருவிருத்தம்

திருமகள் தருவள்ளி செப்புமா லோலமெனும்
தேவாம்சத் தொனியுணர்ந்து
செந்தினை வனத்தோடித் திருமணம் புரியென்ற
சிவவேட ஞனமுருகா
விரவுகாம் போதிநிரை மேய்த்தன்பு மாதரொடு
விளையாடும் கண்ணன்மருகா
மெய்யுருகு வார்பாடும் கரகரப் பிரியனே
மேவுசக் கரவாகனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமறை தந்தவா, ஆனந்த பைரவி
அணைக்குஞ் ஸ்ரீசண்முகா
அங்கையினில் ஓடேந்தித் நன்யாசிப் பாலித்த
அண்டங்கள் காக்குமீசன்
தருமழலைக் குருபரா தமிழ்மோக ஞநினது
தாளிணைத் தேனருளுவாய்
தண்பரவை தொண்டைமா ஞறுதழு வும்செல்வச்
சந்நிதிக் கந்தவேளே.

— செல்வச்சந்நிதித் திருப்பாமாலை

* * *

''தந்தைதாய் தம ரழிய—இந்தத்
தையல்தனைக் கொண்டுசெல்லு வதுதகுமோ
எந்தையே அருள் புரிவீர்''—எனவே
எம்முருகன் சம்மதித்துப் புன்னகைசெய்து

வள்ளியின் புகழை யிந்த—உலகம்
வைத்துணருந் தத்துவத்தைக் காட்ட நினைந்து
''வள்ளியே இவர்களை நீ—உயிர்பெற
வழங்குக வரம்''என இளங்குமரன்

வள்ளியம்மையார், வேடரை எழுப்புதல்

சொல்லவே வள்ளி யழகி—தனது
சுற்றங்கள் யாவரையும் எழுப்பிவைத்தாள்
மெல்லவே வேடர் பணிந்தார்—உடனே
வேலவரும் ஆறுமுகக் காட்சிகொடுத்தார்.

''செய்தபிழை பொறுத் தருளி—தேவரீர்
சிற்றூர்க்கு வந்துமணம் செய்திடு''மென்றூர்
உய்கருணை எம் பெருமான்—வேதம்
உற்றபுகழ் நாரதரும் கூடவரவே.

முருகனும் வள்ளியும் சிற்றூரில்

சிற்றூர்க்கு வந்து சேர்ந்தார்—முருகனும்
தேவியும் புலித்தோல் மீதிருக்க
முத்தாரம் விழி சொரிந்து—நம்பி
முருகற்கு வள்ளியைத் தாரைவார்த்தான்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தம்

கன்னிவள்ளி நாயகிக்கும்
கந்தப்ப நாதனுக்கும்
மன்னுமுயர் சதுர்மறையின்
வகுத்தவிதி தவறுமல்
உன்னுதிரு மணக்கிரியை
ஓங்குதிரு வருள்கொண்டு
முன்னுணரும் நாரதமா
முனிராசன் செய்தாரே.

* * *

நாரதர் வேதவிதி செய்தனர்

திருவருட் குறிப் பாலே – நாரதர்
தீவளர்த்து வேதவிதிக் கிரியைசெய்தார்
அரியயன் சுரர் சூழ—சிவனுர்
ஆதிசத்தி யோடுவிண் ணின்றுமகிழ்ந்தார்.

தேவர்பூ மழை சொரிந்தார் – ஞானச்
சிங்கார வேலனுக்கு வாழ்த்துரைத்தார்
பாவலர் பாடி நின்ருர் —அடியார்
பத்திரசத் தேனுழுகி ஆடிநின்ருர். (வே)

* * *

திருமண வாழ்த்து

இராகம் : கல்யாணி

பல்லவி

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
மங்களமாய் வாழ்கவே.

அனுபல்லவி

வள்ளல் முருகன் வள்ளி தெய்வ
யானை யோடு வாழ்கவே. (வா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம்

ஏழ்க திருடன் ஒளியு மாகி
இன்ப மலரும் மணியு மாகி
சூழ்ம றைகளும் செயலு மாகி
சுகமும் பொருளும் பயனு மாகி (வா)

அறமும் பொருளும் சுகமும் பெருக
அரிய மறையின் நெறிகள் பெருக
அறிவு மிளிரும் சுதிகள் பெருக
அன்பு மணத்தின் பண்பு பெருக. (வா)

* * *

முருகன் அருள்புரிதல்

நொண்டிச் சிந்து

வாழ்த்துரையில் மகிழ்ந்த கந்தன்— வானில்
மன்னுமப்பன் அம்மைதன்னை யஞ்சலிசெய்து
ஏத்திநின்ற வேடு வர்க்கு—பெருமான்
ஈராறு கண்ணாலே அருள்புரிந்தார்.

அப்பொழுது நம்பி ராசன்—அங்கே
ஆய்கனி கிழங்குதினை தேனும்படைத்து
''சுப்ரமண்யப் பரம் பொருளே''—என்று
தோத்திரங்கள் நாத்தழும்பு கொள்ளப் படித்தான்.

* * *

தெம்மாங்கு நடை

கந்தா முருகைய னே—எங்கள்
கதிர்காம வேலைய னே
சந்தோஷ காரண னே—கலை
சங்கீத பூஷண னே. (கந்)

பார்க்கப் பரவச மே—உன்
பன்(னி)ரண்டு கையழ கு
தீர்க்க தரிசன மே—உன்
சீரான சேவடி கள். (கந்)

UNIVERSITY OF CEYLON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வயானை வள்ளியு டன்—நீ
செல்வமயில் மீதமர்ந் து
வெய்யவினை தீர்த்திடு வாய்—வடி
வேலாயு தக்கும ரா. (கந்)

காவடிச் சிந்து

வேல்முருகா வடி வேல்முருகா வடி
வேல் முருகா முருகா—திரு
மால்மரு காசிவ ஷண்முக வாமயில்
வாகன னே வருவாய்—மயில்

வேலப்ப னேமலை வேலப்பனே—எங்கள்
வீரசெங் கோ லப்பனே—தண்டைக்
காலப்ப னேமறை நூலப்ப னேசெல்வக்
கந்தப்ப னேயருள் வாய்—எங்கள்

நொண்டிச் சிந்து

இந்தவிதம் கை தொழுது—நம்பி,
எம்மவரைக் காத்தருளு மென்றிரங்கினான்
அந்தப்பொ ழுதே முருகன்—நம்பிக்கு
ஆட்சிமுடி சூட்டியே யருள்புரிந்து

" நன்றாக வாழ்ந் திடுவாய்—பின்பு
நம்மடியை நாடிவந்து சூழ்ந்திடுவாய் "
என்றுதிரு வாய் மலர்ந்தார்—எங்கள்
ஏறுமயில் ஏறிவரும் ஆறுமுகனார்.

வள்ளியுடன் திருத் தணிகை—மலையில்
வந்துகொலு வீற்றிருந்து சிந்தைமகிழ்ந்தார்
கள்ளமொன் றில்லாத வள்ளி—தணிகைக்
காட்சிதனைக் கண்டுமனை வியப்படைந்தாள்.

" எங்கணும் காண் பரிய—இயற்கை
இம்மலையின் கண்ணமையக் காரணமென்ன?
இங்கிதனைச் சொல்லுக" என—வள்ளி
இன்பமயில் வாகனனைக் கேட்கையிலே,

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தணிகைச் சிறப்பு

வேறு

எங்கள்வேலன் சொல்லுவார்
எங்கள்வேலன் சொல்லுவார்
தங்கும்தணிகை மலையதனில்
தனிச்சிறப்பைச் சொல்லுவார்.

இன்பவள்ளி நாயகியே
இச்சாசத்தி யானவளே
அன்புவளர் சுந்தரியே
அதன்சிறப்பைக் கேட்டிடுவாய். (எ)

சூரரையும் வேடரையும்
தோற்கடித்த என்கோபம்
தீரவே தணிந்ததனல்
செருத்தணிகைப் பேருடைத்து. (எ)

மலரினிலே வனஜமலர்
மாநதியில் கங்கைநதி
மலைகளிலே திருத்தணிகை
வண்பதியில் திருக்காஞ்சி. (எ)

எம்மைவந்து பூசித்ததே
வேந்திரனுண் டாக்கிவைத்த
மும்மலர்நீ லோற்பலங்கள்
முளைக்கும்நீல கிரியிதுவே. (எ)

வந்திதனைச் சூழ்ந்தவர்கள்
மதித்தவர்கள் துதித்தவர்கள்
பந்தவினை தீர்ந்திடுவார்
பலவரங்கள் பெற்றிடுவார். (எ)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத கம்பல செய்தவ ராயினும் பவங்கள்
ஏதும் வைகலும் புரிபவ ராயினும் எம்பால்
ஆத ரங்கொடு தணிகைவெற் படைவரேல் அவரே
வேதன் மாலினும் விழுமியர் எவற்றினும் மிக்கோர்.

— கந்தபுராணம்

* * *

வேறு

நொண்டிச் சிந்து

என்றுரைத்த மொழிகேட்டு—வள்ளி
ஏகாந்த யோகத்தின் இன்பமுறவே
வென்றிமிகும் குன்றதனிலே—வேலன்
மேவிலிங்க பூசைசெய்து வள்ளியுடனே

நின்றபெருங் கைலைமலை—பங்கில்
நேரான கந்தகிரிக் கோயிலடைந்தார்
மன்றல்மிகு தெய்வயானை—அங்கே
வள்ளிமண வாளனடி வணங்கிநின்றாள்.

வள்ளியும் தெய்வயானை—பாதம்
வணங்கி மனமார இணங்கிநிற்க
வள்ளலாம் மயிலழகன்—இருவர்
வந்தமுற் பிறப்பும் வகுத்துரைத்தார்.

குஞ்சரியும் வள்ளியும்

தெய்வகுஞ் சரியம்மை—தங்கள்
செய்திகளைச் செவ்வனே தெரிந்துணர்ந்து
மெய்யன்பு சுரந்திடவே—வள்ளியை
விட்டகன்ற தங்கையென அணைத்துக்கொண்டாள்.

* * *

இராகம் : தேவகாந்தாரி தாளம் : ஆதி

பல்லவி

வள்ளியும் குஞ்சரியும் வலமிட மாயிருக்க
வள்ளலும் கொலு விருப்பான்—வடிவேல்

MICROFILMED
Positive
Negative
Reel No. 11065
Date: 8/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபல்லவி

புள்ளிமயில் மீதும் புனிதர்மன மீதும்
தெள்ளிய செந்தமிழ் தேங்கு கலைமீதும் (வ)

சரணங்கள்

நீலக் கடலில்வரும் ஞாயிறு போலே
நின்றிடுவான் பரங் குன்றினிலே—தனது
கோலக் கரங்களாலும் குளிர்ந்த முகங்களாலும்
கொடைதரு வான்திருச்செந் தூரினிலே—சிவ
மூலக்கருத் துணரும் முனிவரர் வேண்டிடும்
முதுகனி யாயமர்ந்தான் பழனியிலே—மறை
நூலைச் சுவைத்தவரின் பூசைக் கமர்ந்திருப்பான்
நுவல்திரு வேரக ஸ்வாமிம லைதனிலே. (வ)

திருத்தணி முதலாய குன்றுதோ றுடி
திகழ்குர வைக்கூத்தில் மகிழ்ந்திருப்பான்—அழகு
திருப்பழ முதிர்சோலை மலையினி லடியார்
செய்கிற பூசையெல்லா மேற்றருள்வான்—கந்தன்
தரித்த கதிர்காமத் தலத்தினிலே வந்து
தரிசனை செய்தவர்க்குத் தாள்கொடுப்பான்—நல்லூர்
அருட்செல்வச் சந்நிதி மாவிட்ட புரம்மண்டூர்
அடைந்தவர் வேண்டுவன அத்தனையுங் கொடுப்பான். (வ)

* * *

கொலுவா யிருந்தாராம்—முருகன்
கூடிய கற்புமணம் களவுமணம்
பொலிவா யிருந்தாராம்—என்றும்
பூரண பிரமச் சாரியவரே.

இச்சை கிரியைஞானம்—இவற்றை
இருகன்னி வேலெனத் தாங்கினரே
இச்சரிதை மெய்ப்பொருளை—உணர
எம்பெரு மான்அருள் வேண்டுமப்பா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ குஞ்சரி வள்ளிநாயகன்
திருப்பொன்னூஞ்சலில்

ஓமெனும் மயிலாட—சேவல்
ஓம்முரு காவெனக் கூவிடவே
மாமறை யூஞ்சலிலே—குஞ்சரி
வள்ளியும் வள்ளலும் மன்னுங்காட்சி

கண்கொள்ளாக் காட்சியப்பா—இதனைக்
கருத்தறி வோருக்கு மோட்சமப்பா
விண்கொள்ளாத் தேவதேவன்—நாங்கள்
விரும்பிய வைழக்குமுன்பு வருவாராம்.

* * *

பயன்

கந்தன்கதையைப் படித்தோர்—கேட்டோர்
கண்ணிய மாயதன் கருத்துரைத்தோர்
சிந்தனைத் தேனருந்தி—முடிவில்
சிவகதி யடைவது திண்ணமாமே.

மங்களம்

சுபமங்களம் ஜய சுபமங்களம்
சுபமங்களம் ஜய சுபமங்களம்

ஆறுமுக வள்ளலுக்குச் சுபமங்களம்
அருள்வள்ளி குஞ்சரிக்குச் ,,
ஏறுமயில் வேலுக்குச் ,,
ஏற்றகுக்கு டத்துக்குச் ,,

ஆனைமுக அண்ணலுக்குச் சுபமங்களம்
அப்பனுடன் அம்பிகைக்குச் ,,
கானமிகு கண்ணனுக்குச் ,,
கருதுமடி யாருக்குச் ,,

சுபம்

MICROFILMED
Positive 1
Negative 11065
Reel No.
Date; 8/11/91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
18 A
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org